செ.வெ. எண்: 527 நாள்: 06–09–2012

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் செப்டம்பர் 2012 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 08.09.2012 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>பு.எண்.2, ப.எண் 22, வாத்தியார் கந்தப்ப தெரு, சூளை, செ - 112 |
| 2 | இராயபுரம் | சென்னை உயர்நிலைப்பள்ளி,<br>2/1, மணிகண்டன் 8வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, செ - 21 |
| 3 | பெரம்பூர் | ஜமாலியா மேல்நிலைப்பள்ளி,<br>எண்.47, பெரம்பூர் நெடுஞ்சாலை, செ - 12 (பெரம்பூர் ரயில்வே நிலையம் பின்புறம் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி<br>எண்.32 சுந்தரம் பிள்ளை தெரு (புரசைவாக்கம் டேங்க் அருகில்)<br>புரசைவாக்கம், சென்னை - 7 |
| 5 | அம்பத்தூர் | பிரிட்டானியா உயர்நிலைப்பள்ளி<br>எண்.336, ராஜா தெரு, பாடி, சென்னை 50 ( பிரிட்டானியா கம்பெனி அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை துவக்கப்பள்ளி<br>எண்.1, திருவீதியம்மன் கோயில் தெரு, கொளத்தூர், சென்னை – 99<br>(அஞ்சுகம் நகர் 18வது தெரு அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | சி.குருமூர்த்தி, வித்யாலயா உயர்நிலைப்பள்ளி<br>223, பாடசாலை தெரு, ஆர்.வி.நகர், கொடுங்கையூர், சென்னை 118 |
| 8 | ஆவடி | ஆவடி நகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>பிள்ளையார் கோயில் தெரு, கோவர்த்தனகிரி , சென்னை 71 |

| | | |
|---|---|---|
| 9 | தி.நகர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி ,<br>எண் 1, செட்டித்தெரு, போரூர், சென்னை– 116 |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி,<br>ராமகிருஷ்ணபுரம், முண்டககன்னியம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை 4 ( ராஜா கல்யாண மண்டபம் எதிரில்) |
| 11 | பரங்கிமலை | J M A நடுநிலைப்பள்ளி பம்மல் மெயின் ரோடு , பம்மல், சென்னை 75 ( பம்மல் நகராட்சி அலுவலகம் எதிரில்) |
| 12 | தாம்பரம் | திருவஞ்சேரி ஊராட்சி மன்ற அலுவலகம், திருவஞ்சேரி சென்னை - 126 ( புனித தோமையார் மலை ஒன்றியம்) |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை மாநகராட்சிப்பள்ளி, எண் 10, ராஜலட்சுமி நகர் 2 வது தெரு, 100 அடி ரோடு வேளச்சேரி , சென்னை - 42 |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி தொடக்கபள்ளி, எண் 1 திருவள்ளுவர் சாலை, வன்னிய தேனாம்பேட்டை, சென்னை - 18 |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சிப்பள்ளி, எண் 2 நாகப்ப முதலித் தெரு,<br>கொய்யாத்தோப்பு, புதுப்பேட்டை, சென்னை 02 |
| 16 | சோழங்கநல்லூார் | மாநகராட்சி கோட்ட அலுவலகம்,<br>மண்டலம் 14 கிழக்கு கடற்கரை சாலை, கொட்டிவாக்கம், சென்னை 41 |

ஒம்/- பெ.மு.பஷீர் அஉறமது
ஆணையாளர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**